## இருபத்தைந்தாவது
# திருப்பரங்கிரிவகுப்பு.

தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன, தனதானன

சாதி யுங்குல மாவ தங்குடி யாவ தஞ்சன மாவதங்கிளை தார மூர்கிர பால ரும்பிர சான மும்பெரு சான்மை யும்பெறு தான மும்பகு மான முஞ்சிவ ஞான மும்பல கோல மும்புரி, தொழிலோடுமே

தாழ்வ கன்றிடு வாழ்வும் வெம்பிணி நோயு மஞ்சதி வாதுரக் தனி லாவ துர்தளர் சாவொ ழிந்திடு யோக முஞ்சிவ பேறுமெய் தி தான முஞ்செய்த ராசு சண்டது போல்வ ரும்பொதுவாகு மென்றனை, திருநாளேய (௧)

ஓதி னெஞ்சய ரார்தி னந்திரி காலமுந்தொழு வோர்வி ரும்பிய சேத மன்புட னேச ருங்கிர்பை யாக வந்தது பூதிதந்துமு னால்க டந்திட வேபு ரந்தருள் கூரு மிங்கித சேவை நம்பிய, படிகாணவே *

ஓசை வந்தனை யாய்வ ணங்கிய வேழை சிந்தையு னேசினேந் திடு வேலை வந்தினி தாய்வ ரந்தர வேணு மெனரக மேவ ருந் தியு மோதி னன்றின நான்வி ளம்புத லிய நிந்துமி தேனிரங் கிலே, யதிவேணையா (௨)

ஆதி யந்தம நாதி வீர்துவ நாத மும்பிரி யாசி னைந்தவ ரூப வின்ப சொரூப சுந்தர சோதி யின்பொலி நீதி யம்பொரு ளாகநின் றப ராபரன்கரு ணாலயன்புல வோரி னைஞ்சிட, வெதிர்காளியா *

தாட வின்செக சேகி ணங்கிண சேகு டண்டம டாட மன் டம தாகி ணர்கிண தோதி ணங்கிண தாதி மிந்திமி தோவெ ணுங்தொனி யார்சி லம்பொலி தான மிஞ்சிட வோ டம்புரி பாத நம்பர, னருள்பாலனே (௩)

மாதி ரந்திசை யாக வந்திக டாச லந்திரை மாச லம்புவி மாக மண்டக டாக மும்பொனின் மேருவின்றலை யேகு. லுங் கிட வாச மொன்றிய கால்பொ ருந்துகன் வானி ரம்பிட வேவ ருங்கதிர், வடிவேலனே *

வான ரங்கதிர் தாவு தண்டலை மேவு கொண்டலை யூடு சின் தலை மாவி னங்களி கூரு கண்பொடு கோக நஞ்செறி பாலவந்திகழ் பேர்சி றந்திரு மூவர் வீற்றையர் சூழ்ப ரங்கிரி, முருகேசனே. (௪)

திருப்பரங்கிரிவகுப்பு முற்றிற்று.

## திருவகுப்பு முற்றுப்பெற்றது.

வேலுமயிலுந்துணை.

http :\\ www. thamizham. net

